உள்ளனர். அந்த மின் இணைப்புகளும், ஏற்கனவேயுள்ள மின் இணைப்புகளும் தாங்கக்கூடிய வண்ணம் கபிலர்மலையில் ஏற்படுத்தக்கூடிய சப்-ஸ்டேஷனில் மின்கலங்கள் பொருத்தப்படுகிறதா? எதிர்காலத்தில் மின் தட்டுப்பாடு இல்லாமல் அந்த மின்கலங்கள் பார்த்துக் கொள்ளுமா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆற்று ஓரங்களில் உள்ள கிணறுகளில் மின்சாரத் தொடர்பு கொடுப்பது பற்றி இந்த அரசு விரிவான முடிவை எடுத்திருக்கிறது. பட்டா நிலங்களில் இருந்தால்தான் அவர்களுக்கு அனுமதி வழங்கப்படும். அதுவும் அரசினுடைய அனுமதி பெற்றுத்தான் வர வேண்டும். அதிலும் சுயநிதித் திட்டத்தின்கீழ் அந்தத் தொகையைக் கட்டி, மின்சாரக் கட்டணம் செலுத்த வேண்டுமென்று சொல்லி இருக்கிறோம். சில இடங்களில் அரசினுடைய அனுமதி பெறாமல் சிலபேர் நேராக மின்சாரம் பெறுகிற சூழ்நிலை ஏற்படுகிறபோது, அதுவும் அரசினுடைய நடவடிக்கையில் இருக்கிறது. ஆகவே, இந்தப் பம்பு செட்டுகளுக்கு மின்சாரம் கொடுப்பதற்கென்று தனியாக பிரத்யேகமாக அமைக்க முடியாது. துணை மின் நிலையம் அமைப்பதே அந்தப் பகுதியினுடைய மின் அழுத்தத்தை சீர் செய்வதற்குத்தான். ஆகவே தொழிற்சாலையாக இருந்தாலும், விவசாயத்திற்காக இருந்தாலும், வீட்டு இணைப்புகளாக இருந்தாலும் அல்லது கமர்ஷியல் காம்ப்ளக்ஸ் என்று சொல்லப்படுகிற பல்வேறு வியாபார ஸ்தலங்களுக்குத் தரப்படுகிற மின் இணைப்பாக இருந்தாலும், எல்லாவற்றுக்கும் துணை மின்நிலையத்திலிருந்துதான் கொடுக்கிறோம். ஆகவே, தனிப்பட்ட முறையில் அதற்கென்று தனி அமைப்பாக ஏற்படுத்த முடியாது. அதற்கென டெக்னிக்கல் ஃபீசிபிலிட்டியும் அதிலே இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 208, திரு. இரா. அப்பு நடேசன்; மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

208—

திருவட்டாறு தொகுதியில் மின்மாற்றிகள் அமைத்தல்.

*** 20333—***திரு. இரா. அப்பு நடேசன்:*

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவட்டாறு தொகுதியில் சாத்திரவிளை, சானல்கரை, கல்லடி, மாமுட்டு ஆகிய இடங்களில் மின்மாற்றிகள் அமைக்கும் திட்டம் எந்நிலையில் உள்ளது?

[1994 ஏப்ரல் 6

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திருவட்டாறு தொகுதி சாத்திரவிளை, சானல்கரை பகுதியில் ஒரு புதிய மின்பகிர்மாற்றி 5-5-93 அன்று நிறுவப்பட்டுள்ளது. கல்லடி, மாமுட்டு பகுதிகளில் புதிய மாற்றி ஏப்ரல் 1992-ல் நிறுவப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. இரா. அப்பு நடேசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சாத்திரவிளையில் ட்ரான்ஸ்பார்மர் அமைக்கப்பட்டுள்ளது என்று சொன்னார்கள். உண்மையில் கேள்வி போட்டவுடன் இப்படிப்பட்ட வேலைகளை துரிதகதியாக முடித்துத் தருகிற இந்த அரசுக்கு நன்றி சொல்வதோடு (மேசையைத் தட்டும் ஒலி) எங்களுடைய கல்லடி, மாமுட்டிலே பழைய ட்ரான்ஸ்பார்மர்தான் இருக்கிறது. அதைப் புதுப்பிக்கும் ஒரு திட்டத்திறகு கூடுதலாக எஸ்டிமேட் போட்டு அனுப்பியதாகச் சொன்னார்கள். அது இதுவரையில் நடக்கவில்லை. அதுமட்டுமல்லாமல் பேச்சிப்பாறையில் ஒரு சப்-ஸ்டேஷன் இருக்கிறது. அந்த சப்-ஸ்டேஷனிலிருந்து குலசேகரம், திருவட்டார் வரையில் கனெக்ஷன் வருகிறது. அங்கே அடிக்கடி மழை பெய்வதாலும், ரப்பர் மரங்கள் நிறைய நிற்பதாலும் ஒரு நாளில் 10, 15 தடவைகள், மின்சார அழுத்தக் குறைவு இருந்தபோதிலும் கூட, அங்கே கரண்ட் கட்டாகி விடுகிறது. துண்டிக்கப்படுகிறது. ஆகையினால், அங்கு இருக்கின்ற பேக்டரிகளுக்கும், வீடுகளுக்கும் ஆஸ்பத்திரிகளுக்கும் மிகச் சிரமமாக இருக்கிறது. எனவே பேச்சிப்பாறையில் உள்ள சப்-ஸ்டேசனிலிருந்து குலசேகரம் வரையில் ' அன்டர் கிரவுன்ட் கேபிள் ' போட்டு, அங்கே மின்தடை இல்லாமல் மின்சாரம் தருவதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

பிற்பகல் 10.30

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்வியைப் போட்டவுடனேதான் டிரான்ஸ்பார்மர் போட்டார்கள் என்று சொன்னார்கள். அது சரியான தகவல் அல்ல. இந்த அரசுக்கு கோரிக்கையைக் கொடுத்தவுடனே, —நம்முடைய உறுப்பினர் அவர்கள் கோரிக்கையாகத் தெரிவித்திருந்தார்கள். அதற்குப் பின்னாலே கேள்வியைப் போட்டிருக்கிறார்கள். அவர்கள் கோரிக்கையைக் கொடுத்தவுடனே—இது சம்பந்தமாக நடவடிக்கை எடுத்து, அங்கே மின்மாற்றியை அமைக்கவேண்டும் என்று நம்முடைய மின்சார வாரியத்திற்கு அரசின் சார்பிலே உத்தரவிடப்பட்டு, பணிகள் முடிக்கப்பட்டன. கல்லடி, மாமுட்டு பகுதிகளில் இருக்கிற பழைய மின்மாற்றியை மாற்றி அமைத்து, புதிதாக டிரான்ஸ்பார்மர் போட வேண்டும் என்று கேட்டிருக்கிறார்கள். அதுசம்பந்தமாக உடனடியாக

1994 ஏப்ரல் 6]

ஆவன செய்யப்படும் என்பதையும் அவர்களுக்கு நான் தெரிவித்துக் கொள்கிறேன். அடுத்து, கேபிள் போடுகின்ற விஷயத்திலே செலவினங்களைப் பொறுத்துத்தான் நடவடிக்கை எடுக்க முடியும். ஏன் என்றால், நம்முடைய மின்சார வாரியம் எவ்வளவு தூரம் இடர்ப்பாடுகளுக்கு இடையே இயங்கிக் கொண்டிருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அத்தனை பேர்களும் நன்றாக அறிவார்கள். ஆகவே, அதுசம்பந்தமாக விரிவான அறிக்கையைப் பெற்று, நிதி ஆதாரங்களைப் பொறுத்து, அதை எப்படிச் செயல்படுத்தலாம் என்று தொழில்நுட்ப வல்லுநர்களோடு ஆராய்ந்து, நடவடிக்கை எடுக்கப்படும். அந்தப் பகுதியிலே ஏற்படுகின்ற பிரச்சினைகளைக் களையவேண்டும் என்றுதான், கன்னியாகுமரி மாவட்டத்திற்கு ஏற்கனவே 8 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டு, பல திட்டங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அவர்களுடைய கோரிக்கையை இந்த அரசு கனிவோடு பரிசீலித்து, அந்தப் பகுதியிலே இருக்கிற குறைகளைக் களைவதற்கு நடவடிக்கை எடுக்கும் ஒரு விரிவான அறிக்கையைப் பெற்று, இதுசம்பந்தமாக ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. இரா. அப்பு நடேசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களுக்கு மீண்டும் நன்றியைச் சொல்லிக் கொள்கிறேன். அதோடு அங்கேயுள்ள வியன்னூரிலே ஒரு சப்-ஸ்டேசன் கேட்டு, 4, 5 வருடங்களாகின்றன. அதற்குத் தேவையான பூமியை எல்லாம் அக்கொயர் பண்ணிக் கொண்டிருக்கிறார்கள். அந்த சப்-ஸ்டேசனை 1994-லே முடித்துத் தருவதாக முன்னாலேயிருந்த என்ஜினியர் கூறினார். அந்த சப்-ஸ்டேஷன் வந்தால், அங்குள்ள மின் அழுத்தக் குறைவு சீராகும் என்று சொல்கிறார்கள். ஆகையினாலே, வியன்னூரிலே சப்-ஸ்டேசன் அமைக்க வேலைகள் இந்த வருடம் துவங்கப்படுமா? அதைச் சீக்கிரமாக முடித்து, கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள என்னுடைய திருவட்டாறு தொகுதி மக்களுக்கு வசதி செய்து கொடுக்க அரசு முன்வருமா என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த சப்-ஸ்டேசன் சம்பந்தமான விவரங்கள் என்னிடத்திலே இப்போது இல்லை. இருந்தாலும், சென்ற ஆண்டு அறிவித்தபடி, மின்சார வாரியத்தினுடைய நிதிநிலை அறிக்கையின் விவாதத்திலே தெரிவித்தபடி, அந்தப் பணிகளை எல்லாம் இந்த ஆண்டு முடிக்கவேண்டும் என்றும், எந்தெந்தப் பகுதிகளிலே துணை மின்நிலையங்களை அமைக்கவேண்டும் என்று அரசு உத்தரவிட்டு இருக்கிறதோ, அவற்றையெல்லாம் காலக்கெடுவிற்குள் முடிக்கவேண்டும் என்றும் நம்முடைய மின்சார வாரியத்தைக் கேட்டுக் கொண்டிருக்கிறோம்.

துரிதமான நடவடிக்கை எல்லாப் பகுதிகளிலேயும் இன்றைக்கு நடந்து கொண்டிருக்கின்றது. தமிழகம் முழுவதும் புதிய துணை மின்நிலையங்களை அமைக்கின்ற பணிகள் மிக வேகமாக நடைபெற்றுக் கொண்டு இருக்கின்றன. அதைப்போலவே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்திருக்கிற அந்த ஊரிலே துணை மின் நிலையம் அமைக்கின்ற பணிக்கு அனுமதி கொடுக்கப்பட்டு இருக்குமானால்—அதற்கும் குறிப்பிட்ட காலத்தை நாங்கள் நிர்ணயித்து இருக்கிறோம்., அந்தக் காலக்கெடுவிற்குள் முடிப்பதற்கான நடவடிக்கையை அரசு மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 209, டாக்டர் பிட்ரிக்ஸ் டி'சோசா. மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர்.

209—

சென்னை பட்டினப்பாக்கம் அரசு வாடகைக் குடியிருப்பில் குடியிருக்கும் சொந்த வீடுள்ள ஒதுக்கீடுதாரர்களை வெளியேற்ற நடவடிக்கை

*** 9611—*டாக்டர் பிட்ரிக்ஸ் டி'சோசா:***

மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை பட்டினப்பாக்கம் அரசு வாடகைக்குடியிருப்பில் உள்ள ஒதுக்கீடுதாரர்களில் சொந்த வீடோ, அடுக்குமாடி வீடோ இருந்தும் அரசுக் குடியிருப்பில் தொடர்ந்து இருப்பது அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டுள்ளதா?

(ஆ) அப்படிப்பட்டவர்களை வெளியேற்றுவதில் வீட்டு வசதி வாரியம் வெற்றி கண்டுள்ளதா?

மாண்புமிகு திரு. சே. ரகுபதி, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) பல்வேறு நீதிமன்றங்களில் பரிசீலனையில் இருக்கிற வழக்குகளைத் தவிர, மற்றவர்களை வெளியேற்ற உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. சிலர் வெளியேற்றப்பட்டுள்ளனர்.

DR . BEATRIX D'SOUZA: Hon. Speaker Sir, The Flats, the Middle Income Group Flats at the Foreshore Estate are given out at a very low rent and therefore the occupants are reluctant to leave these Flats even if they build their own houses and these include Government Servants who have got houses in the name of their wives. I understand that many